NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 March 2023

# அறுவை சிகிச்சைக்கு பாவனைப் பயிற்சி

சிங்கப்பூரில், இதயம், நுரையீரல், உணவுக்குழாய், முக்கிய ரத்த நாளங்கள் போன்ற பாகங்களில் அறுவை சிகிச்சை செய்யும் சிறப்பு மருத்துவர்களுக்கும் இதுகுறித்துப் பயிலும் மருத்துவ மாணவர்களுக்கும் உதவும் புதிய நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

'கார்டியாக், தொராக்சிக் அண்ட் வேஸ்குலர் சென்டர்' என்பது அதன் பெயர். 'சிமியுலேஷன்' எனப்படும் பாவனைப் பயிற்சிகளை இந்த நிலையம் வழங்கும்.

தேசியப் பல்கலைக்கழக மருத்துவமனை, 'என்யுஎஸ் யோங் லூ லின்' மருத்துவப் பள்ளி ஆகியவற்றின் ஆதரவோடு தேசியப் பல்கலைக்கழக இதய சிகிச்சை நிலையம் இதனை அமைத்துள்ளது.

பாவனைப் பயிற்சி நிலையத்தை அமைக்க செலவிடப்பட்ட தொகையைத் தெரிவிக்க அது மறுத்துவிட்டது.



புதிய நிலையத்தில் 20க்கு மேற்பட்ட மின்னிலக்க, இயந்திரவியல் பாவனைப் பயிற்சிக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. **படம்: ஸ்டெரெய்ட்ஸ் டைம்ஸ்**

நேற்று அதிகாரபூர்வமாக செயல்படத் தொடங்கிய நிலையத்தில் 20க்கு மேற்பட்ட பாவனைப் பயிற்சிக் கருவிகள் உள்ளன.

இவை, உணவுக்குழாய், இதயம் தொடர்பான சிக்கல்களைப் பாவனையாக உருவாக்கும். மருத்துவர்கள் இவற்றுக்குத் தீர்வுகாணப் பயிற்சி பெறுவதன் மூலம் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளலாம்.

அறுவை சிகிச்சை தொடர்பான புதிய உத்திகளைக் கற்றுக்கொள்ள மருத்துவர்கள் கடுமையான பயிற்சி மேற்கொள்ளவேண்டும். தொடக்கத்தில் அனுபவமிக்க மருத்துவர்களின் மேற்பார்வையில் கட்டங்கட்டமாக நோயாளிகளுக்கு அவர்கள் அறுவை சிகிச்சை செய்து பழகுவர் என்று நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பேராசிரியர் தியோடொரஸ் கொஃபிடிஸ் கூறினார். "எந்தத் துறையிலும் நிபுணத்துவம் பெறுவதற்குமுன் ஒருவர் 10,000 மணி நேரம் பயிற்சி செய்திருக்கவேண்டும். இப்போது அதிர்ஷ்டவசமாக, உண்மையான நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யத் தேவையின்றி இந்த பாவனைப் பயிற்சிக் கருவிகள் மூலம் 10,000 மணி நேரம் பயிற்சி செய்ய இயலும்," என்றார் அவர்.

எடுத்துக்காட்டாக, இதயத்தில் ரத்த ஓட்டத்திற்கு உதவும் நான்கு வால்வுகளில் ஒன்று 'மிட்ரல் வால்வ்'. இதைச் சீராக்குவதற்கான அறுவை சிகிச்சையில், கேமரா உதவியுடன் கருவிகளை சரியாக எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதற்குப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

பாவனைப் பயிற்சி மூலம் மருத்துவர் தன்னம்பிக்கையுடன் இதில் திறன்பெற இயலும்.

கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து சோதனை அடிப்படையில் 20 நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் இதில் பயிற்சி பெற்றுள்ளனர். வியட்னாம், மலேசியா, இந்தோனீசியா போன்ற நாடுகள் இவற்றில் அடங்கும்.

கிட்டத்தட்ட 1,000 சிறப்பு மருத்துவர்கள் இவ்வாறு பாவனைப் பயிற்சி மூலம், தேவையான இடங்களில் சிறிய துளையிட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்வது தொடர்பான புதிய உத்திகளையும் கற்றுக்கொண்டனர்.

பாவனைப் பயிற்சி நிலையம் ஆண்டுக்கு 100 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடுகிறது. 'என்யுஎஸ் யோங் லூ லின்' மருத்துவப் பள்ளி மாணவர்களும் இதில் பயிற்சி பெறுவர்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.